Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28 ம் உ. ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-கூரு] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஆவணிமீ ககஉ செவ்வாய்க்கிழமை (4 செப்டெம்பர் 1951) [இல.-சுக]

## திருமுருகாற்றுப் படைச் சிறப்பு

திரு. வித்துவான். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு

II

அதுவன்றித் தமக்குரிய அறுவகைத் தொழிலும் தவறுதவர்களும் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவர்களும் முத்தீச் செல்வரும் ஆகிய அந்தணர்கள் ஈரம்புலராத உடையினராய் உச்சிமேற் கைகுவித்துத்துதித்து ஆறெழுத்து மந்திரத்தை மெல்ல உச்சரித்து நறுமலரால் வழிபடும் ஏரகம் என்னும் ஊரிலும் இருத்தலுரியன்.

அதுவன்றி, வெறியாட்டாளனாகிய வேலன், வெறிபாடக்காட்டுமல்லிகையையும் வெண்டாளியையும் பச்சிலைக் கொடியிலே கட்டின கண்ணியையணிந்தவனும் கள்ளின் தெளிவைக் கானவரோடு உண்டு தொண்டகப்பறை முழக்குக்கு ஏற்பக் குரவைக்கூத்தாடத் தனனைச் சேவிக்கும் மடவரை மகளிருடன் வெட்சி மாலையைச்சூடிப் பலஇயங்களை எழுப்பிக் கோழிக்கொடியை உயர்த்திப் பாடும் மகளிருடனும் மெய் தீண்டி விளையாடற்குரிய மகளிருடனும் அவர்களுக்கு முதற்கைகொடுத்துக் குன்றுதோறும் விளையாடுதலையும் உரியன்.

அதுவுமன்றி, ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்த விழாவினகண்ணும், அன்பர் விரும்பும இடங்களிலும், ஆற்றிடைக்குறையிலும், ஆறுகளிலும, குளங்களிலும், பலவேறு ஊர்களிலும், சந்திகளிலும், கடம்பமரத்திலும், கந்துடைநிலையிலும், மன்றத்து மரத்தின் கீழும், அம்பலத்திலும், மலைப்பக்கங்களில் குறமகளிர் வெறியாடு களங்களிலும் உறைதலுமுரியன்.

முற்கூறிய இடங்களிலேனும் வேறு இடங்களிலேனும் நீ அவனைக்கண்டபொழுது விரும்பித்துதித்துத் தலைமேற் கைகூப்பித் தொழுது 'அறுவர்பயந்த ஆறமர்செல்வ' என்பது முதலாகக் கூறித்துதித்து, "நின் தன்மையெல்லாம் அளவிட்டறிதல் மன்னுயிர்க்கு அரிது. நின் திருவடியைப் பெறவேண்டுமென்று நினைந்து வந்தேன்" என்று நீ கருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னமே அவனுடைய பரிசனங்கள் உன்னைப்பற்றி அவன்பால், "பெரும்! முதுவாயிரவலன் ஒருவன் நின்னைப் புகழ்ந்து வந்தான், அளிக்கத்தக்கான்" எனக் கூறுவர். அப்போது முருகன் ஆங்குத் தன் பெரிய தெய்வ வடிவத்தை உள்ளடக்கிக்கொண்டு தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி உன்னை 'அஞ்சல்' எனக்கூறி நீ விரும்பிய வீடுபேற்றினை அளிப்பான், அருவிகள் ஆர்த்து இழியும் பழமுதிர்சோலையில் உள்ள முருகப்பெருமான். — என்பது இந்நூலின் திரண்ட பொருளாகும்.

### சுவைத்து இன்புறத்தக்க பகுதிகள்

இந்நூல் முழுவதும் சீரிய கூரிய சுவை கனிந்த பொருள் செறிந்த செஞ்சொற்களால் ஆகியது. இதன்கண் சிறப்பாகப் பாராட்டிப்படித்து இன்புறவேண்டிய சில பகுதிகளை மட்டும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

முருகப் பெருமான் மயில்மீது தோன்றுவதற்கு "உலகமுவப்ப .... .... அவிரொளி" என்ற உவமை மிக அழகியது. இதனைப் பின்பற்றியே அருணகிரிநாதரும் "உததியிடைகடவும் .... .... மயிலின்மிசை உக முடிவுள் இருளகல ஒரு சோதி வீசுவதும்" என்றார்.

சூரமகளிர் ஆடை யணிகளும் அவர்கள் விளையாட்டும் இன்பம் பயப்பன. பேய் மகள் வடிவமும் போர்க்களத்தில் அவள் தலையொன்றைக் கையிலேந்தி ஆடுதலும் அச்சம்பயக்கும்.

திருப்பரங்கிரியிற் சுனை வண்டுகளின் இன்பவாழ்வு படிப்போர்க்கு இன்பந்தரும்.

முருகப்பெருமானது திருமுகங்களாறும் திருக்கைகள் பன்னிரண்டும் செய்யும் செயல்கள் அவனே உலககாரணன்; அவனன்றி அணுவும் அசையாது என்பதைப் புலப்படுத்தும். கந்தர் கலிவெண்பாவில் முருகனது திருமுகங்கள் கைகள் செய்யும் தொழில்களாகக் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் இதற்கும் வேறுபாடு கண்டுணர்தல் வேண்டும்.

திருவாவினன்குடிப் பகுதியில் முனிவர்களது தூயதன்மை அழகாகக்கூறப்பட்டுள்ளது. முருகப்பெருமான் மும்மூர்த்திகளாலும் வழிபடப்பெறும் முழுமுதற் பொருள் என்பதும் இப் பகுதியால் விளங்கும். திருவேரகத்தில் அந்தணர்கள் வழிபடும் முறை பயபக்தியைக் காட்டுகிறது. குன்றுதோறாடலில் வேலன் வெறியாடும்முறையும் மலைதோறும் இறைவன் விளையாடும் முறையும் இன்புற எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

பழமுதிர்சோலைப்பகுதியில் முருகன் வாழும் இடங்கள் பல கூறப்படுகின்றன. வெறியாடுகளன் வர்ணிக்கப்படுகிறது. முருகனை முன்னிலையாகப் புகழும் தொடர்மொழிகள் உள்ளத்தை ஊக்கத்தக்கவை.

பழமுதிர்சோலையினின்று இழிதரும் அருவிவருணனை மிக அழகியது.

இத்தகைய சிறந்த செந்தமிழ் அருட்பனுவலை அன்புடன் ஓதி ஆராய்வார்களுக்கு முருகன் எல்லா நலங்களையும் எளிதில் அருளுவான்.

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—
—முற்காலமாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைந்த வெல்லாந் தரும்".

— செந்தமிழ்.

உ

## தோத்திரம்

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே யொற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள் சூழ்ந்தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற் கொழுந்தே என்றெழுவார்கள்
சால நீழ்தல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே.

— சம்பந்த சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

நீலம் ஆர்தரு கண்டன் - நஞ்சணிந்த கண்டத்தையுடையவன்; துன்று - நெருங்கிய. எழுவார்கள் என்றது விடைமேற் செல்வாரை; தாங்குவர் - தரிப்பர்.

## திருக்கோட்டூர்த் தலச்சிறப்பு

உண்மை அறிவு ஆநந்த உருவாகி, எவ்வுயிர்க்கும உயிராய், நீரில் தண்மை, அனலில் வெம்மை எனத் தனை அகலாதிருந்து, சராசரங்களை ஈன்ற பெண்மை உருவாகிய தன் ஆனந்தக்கொடி மகிழ்ச்சி பெருக, பார்க்கும அன்னையதாய் அம்பலத்தின் ஆடியருள் பேரொளியாகிய சிவபெருமான், அங்கு இங்கு எனாதபடி எங்கும் வியாபித்திருப்பினும், பகுத்தறிதல் இல்லாது சிவமெனக் கண்டு வழிபடும் சரியையாளர்க்கு வெளிப்படாது நின்றும், மந்திர நியாசத்தினுல் வழிபடும் கிரியையாளர்க்கு விறகைக் கடைந்தபோது தோன்றும் அக்னிபோல அவ்வப்போது தோன்றி நின்றும், இதயமெங்கும வியாபித்திருக்கும் சிவபெருமான் இந்தச் சிவலிங்கத் திருமேனியிலும் இருந்து பூசை கொண்டருளுவர் என்னும் யோகிகளுக்குக் கறந்தவிடத்துத் தோன்றும் பால்போலத் தோன்றிநின்றும் அன்புமாதிரத்தாலே வழிபடும ஞானிகளுக்குத் தலையீற்றுப்பசுவின் முலைப்பால்போல எப்பொழுதும் வெளிப்பட்டு நின்றும அருள செய்யும்பொருட்டுத் தாவர வடிவாகிய சிவலிங்கத் திருமேனி கொண்டெழுந்தருளிய சிவஸ்தலங்களுள் திருக்கோட்டூர் என்பது காவிரிநதியின் தென்கரையில் உள்ள 111வது தலமாகும்.

வன்னிவன க்ஷேத்திரம் என்னும் மறு பெயரினையுடைய இத் தலம் திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்பெற்றது. அன்றியும் க்ஷேத்திரக்கோவைத் திருப்பதிகங்களிற் 'கோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமும்' என்று திருஞானசம்பந்தப் பெருமானும், இலமையங்கோட்டூர் இறையான்சேரி' என நாவுக்கரையர்பிரானும், ஊர்த்தொகையில் 'கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே' என ஆளுடைய நம்பிகளாலும் போற்றப்பெற்றது. பிரமதேவர், இந்திரன், ஐராவதம், இந்திரசேனன், சாலிகன் இவர்களால் வழிபடப்பெற்றது. திருப்பதிகத்தில், பாசுரந்தோறும் கோட்டூர் நற்கொழுந்து என்று சுவாமி திருநாமமும் திருக்கடைக் காப்பில் தேன்மொழிப்பாவையென்று அம்மை திருநாமமும் போற்றப்பட்டிருத்தல் காண்க.

திருநாவுக்கரசுநாயனாரும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருவீழிமிழலையில் தங்கியிருக்குங்கால் பஞ்சம் உண்டாக இறைவன் அருளாற் படிக்காசுபெற்று அடியவர்களை உண்பித்துப் பஞ்சம் நீங்கியவுடன் முனனும் பின்னுமாக இருவரும் முறையே நடந்தும் சிவிகையிலும் செல்லும்போது ஞானசம்பந்தப்பெருமான் திருவாஞ்சியம் திருவாரூர் திருக்கொள்ளிக்காடு முதலிய தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடித் திருக்கோட்டூரினையடைந்து பதிகம்பாடினர் என்பதை,

'ஓங்குபுகழ்த்
திருக்கொள்ளிக்காடும் போற்றிச்
செம்பொன்
மதிற்கோட்டூரும் வணங்கி ஏத்தி'

என வரும் சேக்கிழார் பெருமான் திருவாக்காலும் அறிக. சுவாமி சந்நிதி மேறகுநோக்கியும் அம்மை சந்நிதி கிழக்கு நோக்கியும் உள்ளன. இத்தலம் கோட்டூரில் மேறகில் உளளது. கிழக்கில் உள்ள தலம் கிழக்கோட்டூரமணி அம்பலமென வழங்குவது. கருவூர்த்தேவர் திருவிசைப் பாப்பெற்றது. சுவாமி: கொழுந்தீசுவரர். அம்மை: தேனுமபாள். விருக்ஷம் வன்னி.

இருப்பிடம்: மன்னார்குடி-திருத்துறைப்பூண்டிக்கற்சாலையில் 9-வது மைலில் உள்ளது. (பஸ்மூலம் போதலாகும்).

— தருமபுர ஆதீன வெளியீடு: 247.

## நாளொன்றுக்கு 40 மோட்டரதம்

மோட்டாரதங்களின் விதிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்ட காலதொட்டு, கொழும்பிலே தினமொன்றுக்கு 40 ரதவிகிதம் விலைப்படுகின்றனவாம். இப்படி இன்னும் மூன்று மாசம் நடைபெறுமென உத்தேசிக்கப்படுகிறது. இந்த இரதங்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதமானவை இங்கிலாந்திலிருந்து வருவன; எஞ்சியவை இத்தலி, பிரான்ஸ், அமெரிக்கா முதலியநாடுகளிலிருந்து வருவனவாம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கர ஞூ ஆவணி மீ ககஉ செவ்வாய்க்கிழமை


## பனைகளைப் பாதுகாக்க வேண்டும்

பனைகள் எங்கள் யாழ்ப்பாண நாட்டிற்குப் பல்லாற்றானும் இன்றியமையாதவை யெனலாம்; பனையின் பிரயோசனம் நூற்றெட்டு வகைப்படுமெனக் காலங்கண்ட முதியோர் சொல்வர்; இப்படிப் பல பயன் தரும் பனைகளின் அருமையையுணர்ந்து எங்கள் மூதாதைகள், நீர்வளங் குறைந்த வெற்றுத் தரைகளில், வேறு எவ்வகைத் தாவரங்களும் விருத்தியடையா நிலங்களில் விதையிட்டு முளைக்கச் செய்து "வடலி" என வழங்கும் இளம் பருவத்தில், மாடு முதலியன கடித்துத் தின்று பங்கம் விளைக்காதபடி வேலி கோலிப் பாதுகாத்து வளர்த்து வந்தார்கள்; அப்பனையால் வரும் பயன்களையும் பலவகையில் அநுபவித்து வந்தார்கள்; மலையற்ற சமநிலமாகிய இந்த யாழ்ப்பாண நாட்டிற்குப் போதிய மழையைத் தருவிப்பதும் பனையேயாகும்; நீர் வார்த்தல் முதலிய சிரமமின்றி வளர்ந்து நீடித்த காலம் பல்வகைப் பண்டங்களைத் தருவதும் பனையேயாகும்; மக்களுக்கு மாத்திரமல்லாமற் பனையோலை, வைக்கோல் விலையேறிய இந்நாட்டிலே, மாடுகட்கு உணவாகவும் பயன்படுகின்றது; கள்ளொன்று தவிர, ஏனைய பனம்பண்ட மெல்லாம் இங்குள்ள மக்களுக்கு எவ்வகையாலுஞ் சீவாதாரமாகவுள்ளன.

இப்படியெல்லாமிருந்தாலும், பிற்காலத்திலே நவநாகரீக மேலீட்டினாற் பனம் பண்டங்களைத் தக்கவாறு இங்குள்ள மக்கள் உபயோகித்து, அதன் பயன்களு ளொன்றாகிய கள்ளினை மாத்திரம் வரவேற்று அருந்தத் தலைப்பட்டனர்; இற்றைக்கு ஐம்பது வருடங்கட்கு முன்னே யாழ்ப்பாணத்தில் நின்ற பனைகளையெல்லாம், இங்குள்ள முழுமக்கள் பலர் பணத்திற் காசைப்பட்டுத் தறித்துப் பருத்தித்துறை வல்வெட்டித்துறை முதலாம் வடபகுதித் துறைமுகங்கள் வாயிலாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தார்கள்; ஆனால் அந்தப் பெருங்கேடு ஏதோ காரணத்தினாற் பின்னர் ஒழிந்துவிட்டது; ஆனாலும் யாழ்ப்பாண நாட்டிலே பனந்தோப்புக்கள்பல, கட்டடங்கள் கட்டும்படி, பனைகளைத் தறித்து வெற்றிடமாக்கப் பட்டுப் பின் சிறந்த கட்டடமாகக் காணப்படலாயின; இல்லங்கள் கட்டடங்களின் கூரை வேலைக்கும் பனைகள் தறித்து உபயோகிக்கப்படலாயின. காலஞ் செல்லச் செல்லப் பனைவிதையிட்டு வடலி வளர்ப்பாரும் பனைகளை விருத்தி செய்வாரும் இலராயினர்; நட்டாயிரம் வருடம் பட்டாயிர வருடம் பயன்படுமெனச் சொல்லப்படும் பனைகள் தாமே பட்டும், தறிக்கப்பட்டும் இக்காலத்துக் குன்றலாயின; இதனால் இந்நாட்டிற் காலந்தோறும் மழையுங் குன்றி வருகின்றது.

நிலைமை இங்ஙனமாக, இப்பொழுது இந்நாட்டில் நிற்கின்ற எஞ்சிய பனைகளுக்கும் பேரிழவு நேருமென அஞ்சக் கிடக்கின்றது; இக்காலத்தில் நடைபெற்றுவருங் கல்லோயாத் திட்டத்திற் கருமம் பார்ப்போரும் வேலை செய்வோருந் தங்கியிருத்தற்கான சமயோசித இல்லங்களையும் இன்ன பிறவற்றையும் அமைப்பதற்குப் பல்லாயிரக் கணக்கான பனை வேண்டுமாம்! அப்பனைகளை விலைக்கு வாங்குதற்குப் போதிய பணமு முண்டாம்; முயற்சிகளும் செய்கின்றார்களாம். காசிற்காசைப்பட்டு இங்குள்ள மக்கள், பரம்பரையாக நின்று பல்வகைப் பயனுதவிய பனைகளைத் தறித்து விற்கச் சம்மதிப்பார்களோ என்பதுதான் சிந்திக்க வேண்டியது; சிங்கள மக்களுள் ஏழைகளாயுள்ளார்க்குப் பலாமரம் எவ்வளவு இன்றியமையாததோ, அதனைக் காட்டிலும் இங்குள்ள ஏழைத் தமிழ்மக்களுக்குப் பனை பன்மடங்கு இன்றியமையாததாகும். அற்ப பணத்திற்கு ஆசைப்பட்டு எங்கள் யாழ்ப்பாணமக்கள் தங்கள் கற்பகதருவாகிய பனையைத்தறித்துவிற்றுவிடவொண்ணாது;பனையைத்தறிக்கவொண்ணாதென்ற விஷயத்திலே இங்குள்ள மதுபானிகளும் மரமேறிகளும் விசேடசிரத்தைபூண்டு உழைப்பரெனஎண்ணலாம். பனைகளைத் தறிக்கவொண்ணாது, தறித்து விற்கவொண்ணாது என்ற அபிமானத்தோடு இந்த யாழ்ப்பாணத்திலேயுள்ள மக்கள் இடையிடையே பெருங் கூட்டங்கள் கூடிப் பிரசாரஞ்செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்; இந்த விஷயமாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை (2-9-51) அல்லை இலங்கை காந்தியசேவா சங்கத்தார், திரு. இ. சிவகுருநாததுரைத் தலைவராகக்கொண்டு ஒரு மகா கூட்டங் கூட்டிப் பெரும பிரசாரஞ் செய்தனர்; ஏனைய இடங்களிலும் இப்படியான பிரசாரங்களைச் செய்து பனைகளைத் தறித்து விற்கவிடாது மக்களைத் தடுத்தல் ஆவசியகம். இவ்வளவோடு மாத்திரம் நின்றுவிடமுடியாது; அரசினரைக்கொண்டும் பனைகளைத் தறிக்கவொண்ணாதென்ற பிரமாணத்தை வற்புறுத்துவித்து, தறித்து விற்க முயல்வோரை அபராதத்துளேனுந் தண்டனைக்குளேனும ஆக்க வேண்டும்.

## உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் 19)

### காயா? கனியா?

கமலாட்சி தங்கள் சொந்த வீட்டிற் சென்று அதிகந் தங்காமல், வனசாவீட்டிற்குப்போனாள்; அவள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வனசாட்சி, கண்டமாத்திரத்தேயெழுந்து விரைந்து சென்று அன்புடன் வரவேற்று அழைத்துக் கொண்டுவந்து ஆசனமிட்டு இருக்கச்செய்து இன்சொற் கூறினள்; கமலாட்சியின் முகத்தை அவதானித்துப் பார்த்தாள்; சென்ற கருமஞ் சித்தியடைந்திருக்கவேண்டுமென்று அயிர்த்தாள்; ஆனால் ஏதும் விசாரித்திலள்; எதுவுங் கமலாவின் வாயினால் வெளிவரட்டுமென் றெதிர் பார்த்திருந்தாள்; இதற்கிடையில், கமலாவின் வரவையறிந்த வனசாட்சியுடைய தாய் அங்கே வந்து கமலாவிற்கு நல்வரவு கூறிச் சுகம் விசாரித்தாள்; "மகளே, நீ உத்தேசித்துப் போன கருமமெப்படி? காயா? கனியா?" என்று ஆர்வத்துடன் கேட்க, "காயுமல்ல, கனியுமல்ல, சீக்கிரத்திற் கனியக்கூடிய நிலைமையி லிருக்கிறதென் றெண்ணுகிறேன்; இனி எல்லாம் ஆண்டவன் அருளைப்பொறுத்தவை" என்று சிந்தனையோடுசொன்னாள் கமலாட்சி "எல்லாம் நன்மையாகும்; நீங்கள் இருந்து பேசுங்கள்" என்று சொல்லிவிட்டு அடுக்களைப் பக்கம் தாய் போய்விட, வனசாட்சி கமலாட்சியைத் தன் படுக்கையறைக்கு அன்புடன் அழைத்துச் சென்று அங்குள்ள "ஸோபா"வில் அவளையிருத்தித் தானும் பக்கலிலிருந்தாள்.

"ஊழிற் பெருவலி யாவுள...."

பின்னரும் கமலா மௌனஞ் சாதிப்பதைக் கண்ட வனசா அவளைப் பரிவுடன் பார்த்து "அக்கா, என்ன ஒன்றும் பேசாமலிருக்கிறீர்கள்" என்று மெல்லப்பன்னினாள்; "பேசாமலிருக்க முடியுமா, தங்காய், என்ன விஷயத்தைப்பற்றிப் பேசச் சொல்லுகிறீர்" என்று புன்னகையரும்பச் சொன்னாள் கமலாட்சி; "என்ன விஷயமானாலும் பேசுங்கள்" என்றாள் வனசா; கமலா சிறு நகை செய்து "தங்காய், நான் புறப்பட்டுப் போன கருமத்தைப்பற்றி என் மாமியாருக்குக் குறிப்பாகச் சொல்லிவிட்டேன்; நீருங் கேட்டுக்கொண்டுதானே நின்றீர்; உம்முடைய எண்ணம் ஆண்டவனருளாற் கைகூடுமென்றுதான் எண்ணக்கிடக்கிறது; இனி ஏதோ விதிவசம் நடக்கும்; உமது மைத்துனர் உம்மை ஒருபோதும் வெறுத்திலர்; உம்மிடத்தில் விசுவாசமுள்ளவராகவே காணப்படுகிறார்; ஆனால் இப்போதைக்கு விவாகஞ் செய்யும் நோக்கமில்லை; சில காலங் கழித்துச் செய்யலாமென்பது அவர் கருத்து; ஆனால் தங்காய் "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" என்ற பிரகாரம் காலம் வந்தவுடனே கல்யாணந்தானாகவே நடைபெறும். அவராலும் உம்மாலும் அந்த நோக்கிலே தவணையிட முடியுமா" என்று பொய்யுடன் கலந்த மெய்யாக விஷயத்தைத் தொகுத்துச்சொன்னாள் கமலாட்சி. (வரும்)

## : வானவில் :

○ கலாமந்திரன் ○

● ஐயா! நல்லைக் கந்தையா! இதுவும் உன் திருவிளையாட்டா? உன் திருக்கோயில நிர்வாக முறையும், நித்திய நைமித்திகக் கிரமமும், தலத்தின் தூய்மையும், திருவருள் விலாசமும் அடியார் உன்னை வழிபடுஞ் சீலமும், இன்ன பிறவும் ஒப்பற்றன என்று ஊரார் பாராட்ட, ஒருவர்மாத்திரம் அவற்றை ஏற்றுக்கொள்ளாராமே. உன் கோயில் உட்பிரகாரத்துட் புகுவோர் போதிய காற்று வசதிக் குறைவால் மிகக் கஷ்டப்படுகின்றார்களாம்: மூலஸ்தானத்திலே வியர்வை நீரைக் கைகளினால் வழித்துத் தூண்களிலும் நிலத்திலுஞ் சிந்தி அசுத்தப்படுத்துகின்றனராம்! ஆனதால் ஆங்காங்கு மின்சார விசிறிகளை அமைப்பின் சாலச் சிறந்ததாகுமாம்! கந்தையா, உன் சந்நிதிக்கு வருபவர்கள் தம்முடம்பிலே வியர்வை சிந்தாமல், மின்சார விசிறியுதவுந் தென்றலையனுபவிக்கவா வருகின்றார்கள்! சத்துரு சங்காரவேலா! உன் திருமுன்னிலையில் நிற்கும் போது மெய்யன்பர்கள் தம்மையே மறந்து பரவசமாகிவிடுகின்றார்களே! நீ காக்கும் அருள் வெள்ளத்திலே திளைக்கின்றார்களே! அந்தநேரத்தில் அவர்கள் சடத்து மின்சார விசிறிக் காற்றுப் பட்டால் அவர்களுணர்வார்களா? மேலும் மூலஸ்தானத்தில் உனக்கு அபிடேகஞ் செய்யும் போதும், ஆராதனை முடிவில் மலரும் பத்திரமுங் கொண்டு உன்னை அர்ச்சித்துப் பஞ்சாலாத்தி காட்டும்போதுமேயொழிய உனக்குப் பூசைசெய்யும் அந்தணர்தாமும் போவதில்லையே! அப்படியான தூய மூலத்தானத்திலே அன்பர்களுக்கும், அவர்கள் வியர்வை வழித்துத் தூணிலும் நிலத்திலுஞ் சிந்தி அசுத்தப்படுத்துதற்கும் இடமெங்கே? ஒருபோது மகா மண்டபத்தை மூலத்தானமென்று கருதினாரோ, கந்தையா! அந்த மகாமண்டபத்திலும் இந்த ஆண்டில் உற்சவகாலத்தில் அன்பர்கள் புகுந்து வழிபடவொட்டாது தடுக்கப்பட்டுள்ளனரே! ஐயா!

○ முருகப்பா! வேலப்பா! இந்த அபவாதத்தைக் கேளப்பா! உன்னை வணங்கித் துதிக்க வருவோர் உட்பிரகாரத்தில் மாத்திரமா நின்று வணங்குகின்றார்கள்! உன் திருக்கோயிலின் புறவீதியிலே மத்தியான வேளையிலே, தெருவீதியிலிடப்பட்ட "தார்" உருகி இடையிடையே அங்கத்திற் பூசுண்ண, பொறுமை கொண்டார் நுன்னம்போலச் சுடும் வெயில் உடம்பை வெதுப்ப, வியர்வை சிந்த அரஹரா முருகா, ஐயா முருகா, கந்தா, கடம்பா, கதிர் வேலா, கார்த்திகேயா என்று தம் வாய் உன திருநாமங்களை உச்சரிக்க அங்கப்பிரதக்கிணஞ் செய்கிறார்களே! அப்படியே பத்தியோடுகூடிய பெண்களும் சிரத்தையோடு அடியழித்துப் பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்கிறார்களே! இந்தத் திடபத்தி கொண்ட அன்பர்களுக்கு நேரும ஆயாசத்தையும, இவர்களுடம்பிலிருந்து சிந்தும் வியர்வையையும் நீக்குவதற்கு மின்சார விசிறிக்கு எங்கே போவது? இவை மாத்திரமா? கந்தையா! உன் திருக்கோயிலிலிருந்து ஐந்து ஆறுமைல தூரத்தில் வசிக்கும் மெய்யன்பர், உன சந்நிதியை அங்கப் பிரதக்கிணஞ்செய்து அடையவேண்டு மென்ற வைராக்கியங் கொண்டாராய், தம் மூரிலிருக்கும ஒரு திருக்கோயிலிலிருந்து அதிகாலையில் அங்கப் பிரதக்கிணஞ் செய்யத் தொடங்கி, குறித்த ஐந்துமைல் ஆறுமைல் தூரத்திற்குத் தெருவழியே

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## வானவில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொடிய வெயில் கொதிக்க, மணல் சுட உருண்டு வருகின்றார்களே! அந்த வெம்மைகளையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது உருளச்செய்வதென்ன? அவர்கள் உள்ளிடத்திற் கொண்ட திடபத்தியும், அவர்கள் வாயிலிருந்து வரும் சிவநாமங்கள் தோத்திரங்களுமல்லவோ! ஈசன் மெய்யடியார் அவனை வணங்கும் போது, அதனுல் அவர்களுக்குவருஞ் சிரமந் தோன்றுமா? தோன்றாது! தோன்றாது!! அப்பன் அடியிணைத் தியானமே அந்த மெய்யன்பர்களுக்குத் தண்ணளி புரியுமல்லவா! இறைவனுடைய திருவடிநீழல் தருஞ் சுகத்தை அப்பர் சுவாமிகள் தம அனுபவத்தைக் கொண்டு சொல்லுகின்றார்:—

திருச்சிற்றம்பலம்

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும்போன்றதே
ஈசனெந்தை இணையடி நீழலே"

திருச்சிற்றம்பலம்

ஆதலால் எங்கள் அப்பனடியார்க்குச் சிரமந் தீர்க்க, வேர்வையகற்ற மின்சார விசிறி வேண்டாம்.

○ "தீண்டாதாரென்று இப்போது ஒதுக்கப்பட்டுக் கோயிலின் புறத்தே நிற்கும் பக்தர்க"ளுக்கும், அப்போது ஒதுக்கப்பட்டு நிற்கும் பத்தர்களுக்கும், தீண்டத் தக்காரென்று சொல்லப்படுவோர்க்கும் உற்சவ காலத்திலே திருவீதியிலே தங்கி நிற்கப் பந்தரிட முடியுமா? வேடிக்கை விநோதம் பார்க்கப் பொழுதுபோக்காகப் பணங்கொடுத்துப் பார்க்கப் பல்லாயிரக்கணக்கானோர் செல்லும் இப் பட்டினத்துள்ள படமாளிகைகளிலும், பிரவேசச்சீட்டு எடுப்பதற்குமுன் ஆண்களும் பெண்களும் வெயிலுக்கேனும் மழைக்கேனும் ஒதுங்கி நிற்றற்கான பந்தர்களாக, வேறு எவ்வகையான ஒதுக்கிடங்களாக எதுவுமில்லையே! இப்படியெல்லாமிருப்ப, சுவாமி வரும்போது திருவீதியில் நிற்போர்க்கு நடைப்பந்தரிட வேண்டுமென்பது புத்தியின் பாற்பட்ட ஆசங்கையாகுமா? ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு பந்தரையிட்டால், மஞ்சம், கைலாயவாகனம், சப்பரம், தேர் என்னுந் திருவிழாக்கள் நிகழும்போது, அந்தப் பந்தல்களை யென்ன செய்வது? திருவீதியிலே நடைப்பந்தரில்லையேயொழிய, திருக்கோயிலுக்கு அன்பர்கள் வரும் எத்தெருவீதிகளிலும், தீண்டுவார்க்குத் தீண்டாதார்க்கென்ற பேதமின்றி, தெருவை மூடி நடைப்பந்தர்கள் பல இட்டிருப்பதையும், மோர், சர்க்கரைநீர், தண்ணீர், இளநீர், தேநீர் அப்பந்தல்களில், அடியாரை அன்புடனழைத்து வழங்கப்படுவதையும், பருகித்தாகந்தீர்த்த பின அடியார் ஆயாசந்தீருமவண்ணம் சற்று நேரம் இருப்பதற்கு அப்பந்தரின இருமருங்கும் மணல் பரவியிருப்பதையும், அப்படியே அன்பர்கள் சற்றுநேரமிருந்து ஆயாசந்தீர்த்துப் போதலையும் என் கந்தையா! காணுயோ! காங்கேசன்துறைப்பெருந் தெருவிலுள்ள தட்டார்தெருச் சந்திக்கும் கந்தசுவாமிகோயில மேற்கு வீதிக்குமிடையேயுள்ள தூரம் ஒரு மைலாகும்; இந்தத் தூரத்திற்கிடையில் மேலே சொலப்பட்ட அமைதியோடுகூடிய தண்ணீர்ப்பந்தல்கள் ஐந்து, அடியார்களால் வைத்து நடத்தப்படுகின்றனவே! அப்படித் தண்ணீர்ப் பந்தர் நடைப்பந்தர் வைத்து நடத்தும் மெய்யடியார்கள் இப்படியான குற்றஞ் சொல்லத் துணியாரே! இதே முறையாகவே, பருத்தித்துறை நல்லூர்த்தெரு, காங்கேசன்துறைத்தெரு, மானிப்பாய்ப் பெருந்தெரு,

## விவாகம்

மகேந்திரன் — இரத்தினேசுவரி

நேற்றிரவு 10 மணிவரை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், இச்சைவப்பிரகாச யந்திரசாலை இந்துசாதன மென்னுமிவற்றின் மனேஜராகிய திரு. சு. பொ. கந்தையாவின் சிரேஷ்ட புதல்வரும், கொழும்பு அரசாங்க "ஸ்ரோரில்" உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய திரு. மகேந்திரனுக்கும், உடுவில் திரு. கா. மருதப்பரின் சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி இரத்தினேசுவரியம்மாளுக்கும், மணமகளில்லத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவேறியது. இன்று வண் கிழக்கு நாவலர் வீதியிலுள்ள மணமகனில்லத்தில் உபசாரணைக்கொண்டாட்டம் நடைபெறுகின்றது.

தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் றிருவருள் முன்னிற்பதாக.

---

வண்ணார்பண்ணை...றைத்தெரு, யாழ்ப்பாண நகரசபையெல்லையுளுள்ள நல்லூர்க்குச் செல்லுங் குறுக்குத் தெருக்களெல்லாவற்றிலும் இடையிடையே பல தண்ணீரப் பந்தர்களும் தங்குமிடங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவே!

○ "திருவிழாக் காலங்களிற் குடிதண்ணீர்க் கஷ்டம் இருந்து வருகிற"தாம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில்; ஐயோ, கந்தையா! இது என்ன அதிசயம்! ஆயிரக்கணக்கான அடியார் வந்தாலும் அல்லும் பகலும் தண்ணீர்மாத்திரமல்லாமல், பல்வகையான பானங்களையும வார்க்கும் மேலேசொலப்பட்ட பல தண்ணீர்ப்பந்தர்களோடு நின்றுவிடாது, திருக்கோயில் வீதியில் நினைத்தபடி தண்ணீர் அள்ளிக் குடிக்கக்கூடிய பாதல கங்கையை நிகர்த்த கூபங்களுமிருக்கின்றனவே! கோபுர வாசலிலே வடக்குப்புறத்தையண்டியொரு கிணறுண்டு, குருபூசைமடத்திற்கணித்தாக இன்னுமொருகிணறுண்டு, மேற்கு வீதியிலே பிள்ளையார் கோயிலுக்கெதிரொரு கிணறுண்டு, அந்தவீதியிற்றானே மூத்ததம்பிதிருமடத்தில் மற்றொரு கிணறுண்டு, வடமேற்கு மூலையிலே தண்ணீர்ப்பந்தலுங் கிணறுமுண்டு, இந்தக்கிணறுகளெல்லாம அடியார் விடாய் தீர்க்க உதவுகின்றன; இப்படியெல்லாமிருப்ப, தண்ணீர்க் கஷ்டம இத்தலத்திலே திருவிழாக்காலத்திலுண்டென்று கூறுதல அடுக்குமா? அல்லுக்கும் பகலுக்கும பேதமறியமுடியாமல் கந்தகோஷ்ம வெளிச்சமயமாக, சோதிமயமாகத் தோன்றும உற்சவகாலத்திலே "வெளிச்சங்கொடுக்கக்கூடிய தீவர்த்திகள் வேண்டும" என்பது கட்பிழையேயொழிய வெளிச்சத்தினபிழையல்ல; என் செயலாம்! "தாயைக் கொலை சால்புடைத்து" எனச்சொல்வாரும் உலகிலுண்டல்லவா!

கண்ணிருந்துங்
காணுவோ கந்தையா!
காதிருந்துங் கேளாவோ
கந்தையா!

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலரோகம், இருமல், பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் உளைவு, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, வெள்ளை, குன்மம், சந்துவாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, ஓஜஸ், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல சோகை உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் நீங்கி, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒரு ருத்தல் விலை ரூபாய் 25-00
அரை „ „ 12-50
கால் „ „ 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையும் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

எமது சோல் ஏசன்றுகள்

| 1 மோகன் அன் கொம்பனி | 2 நவலெட்சுமி புத்தகசாலை |
|---|---|
| No. 66 முதலாம் குறுக்குத்தெரு | செட்டியார் தெரு |
| கொழும்பு | கொழும்பு |

எமது விலாசம்

K. ஆறுமுகம்பிள்ளை
நி 3/1 தட்டாதெரு
கோட்டைமுனை
மட்டக்களப்பு

M 92

## மகளிர் மன்றம்

### சிசு பரிபாலனம்

1

உடனே பிறந்த குழந்தையின் தோல் மிருதுவாகவும் ஒருவித மண்ணிற உரோமம் நிறைந்துள்ளதாகவுங் காணப்படும். சில காலத்தின் பின்னர் இவ்வுரோமம் நீங்கி உண்மையான உரோமங்கள் உடலிலே தோன்றும்.

குழந்தையைக் குளிக்கவார்த்தல் பிறந்தவுடனே மருத்துவிச்சி குழந்தையைக் குளிக்கவார்ப்பாள். கொப்புள் கொடி விழும்வரையிலும் ஈரச்சீலை கொண்டு துடைத்து மாத்திரங்குழந்தையைச் சுத்தப்படுத்தவேண்டும். கொப்புள் கொடியில் ஈரம்படாவாறு அதிக சாவதானமாக இருக்கவேண்டும். கொப்புள் கொடியை ஒரு சீலையினுற் சாவதானமாகச் சுற்றுக கட்டியபின அதைச் சில மருந்துத் திராவகங்களைக் (rectified spirits) கொண்டு ஒவ்வொருநாளுஞ் சுத்தப்படுத்தலாம். கொப்புள் கொடி விழுந்ததும காலையிலும் மாலையிலுங் குழந்தையைக் குளிக்கவார்க்கலாம். காலையிலே தலையையுங் கழுவிவிடுதல் நலம். குழந்தை பிறக்கும்பொழுது அதன் உடலைப் பாதுகாத்துவந்த ஒருவித பசை உடல் முழுவதுஞ் செறிந்து காணப்படுகிறது. நாட்செல்லச் செல்ல இது உரிந்துபோய் விடும். ஒரு காலமும அதை உரித்துவிடக்கூடாது. குழந்தையின் தோல் மிக மிருதுவாக இருப்பதால் அதைக் கடுமையாக உரோஞ்சித் துடைக்கவோ அல்லது அவதானமில்லாது சாத்துடைக்கவோகூடாது.

குழந்தைக்குக் குளிக்க வார்க்கத் தொடங்கு முன்னர் எல்லா...

## சைவ சமயத்துக்கு ஆபத்து

இந்து விசாரணைச் சபையாரின் அறிக்கையை எதிர்க்கும் அகில இலங்கைச சைவ சமயத்தவர் கூட்டமொன்று, சனிக்கிழமை 8-9-51 பி. பகல் 3 மணிக்கு, யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில், பிரதானமாக அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபை ஆதரவில் நடக்கும்.

அத்தருணம் மேற்படி நோக்கத்திற்குச் சார்பானவர் யாவரும் சமூகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

நா. சேனாதிராசா
பொ. அப்புக்குட்டி
M 91—29-8-51

---

...ருள்களையும் ஆயத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரிற் சூடு 98 தொடக்கம் 100 டிக்றி வரையிருக்கலாம். முழங்கையை வெந்நீரில் வைத்து அதன சூட்டை அறிந்து கொள்ளுதல் சுலபமாகும். குழந்தை வளர வளர வெந்நீரின் சூட்டையுங் குறைத்துக்கொண்டு போகலாம். அளவுக்கு மிஞ்சிய வெந்நீரில் குழந்தைகளைக் குளிக்க வார்த்தால் அது அவைகளுக்கு சாம்புத தளர்ச்சியை உண்டாக்கிவிடும்.

L. K. S LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்
காரைநகர் S. நாகலிங்கம் குணரத்தினம்
—வழக்காளி

எதிராக

இல. 7191

1 ஊர்காவற்றுறை சரவணை சின்னத்தம்பி பசுபதிப்பிள்ளை
2 ஷையூர் நாகமுத்து நடராசா
3 ஷையூர் பெண் பாக்கியலெட்சுமி

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் 7191-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளையும் 1951-ம் ஆண்டு புரட்டாதி மீ 29 உ சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல் வட்டி ரூபாய் 1360-ம் ரூபா 1000-க்கு 18-10-50 தொடக்கம் 7-2-51 வரைக்கும் 12 வீதமான வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 195 59½ சதம்.

### காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திரிக்ட்தீவுப்பகுதிஊர்காவற்றுறைக்கோவிற்பற்று சரவணையிறை சட்டம்பி காப்பியான் பா. செ. இலா. 15. எல்லை கிழக்கு நாகமுத்து நடராசாவினுதனம், வடக்கு பசுபதிப்பிள்ளை பெண் மனோன்மணியின் ஆதனம், மேற்கு K. இராசம்மாவிற்கும், N. செல்லையாவிற்கும், செல்லம்மாவினுரித்தாளருக்குமுரிய வாதனங்கள், தெற்கு N. வேலாயுதபிள்ளைக்குரிய வாதனம்,

2 ஷையிறை "வேம்படிவிற்சிமா" பா. செ. இலா. 12 ஆனுல் அளவின்படி பா. செ. இலா. 15 எல்லை கிழக்கு 2-ம் எதிரி கா. நடராசாவிற்கும், P. கண்மணிக்குமுரிய வாதனம், வடக்கு எம். மனோன்மணி தேவிக்குரிய ஆதனம், மேற்கு நமுங்கை முகப்பும் எம். ஆறையப்பாவிற்கும், இளையதம்பி கைம்பெண் இளையபிள்ளைக்குமுரிய வாதனம், தெற்கு ஆறுமுகம் தம்பிராசாவிற்குரிய வாதனம் இதிற் சொரியலாய் மூன்றிலொருபாகம்.

3 ஷையிறை 'இலக்கையாத்தேவன் கலட்டு "பா. கில இலா. மூன்று (3) குளி பதினேழு (17) ஆனுல் அளவின்படியும் ஆட்சிப்படியும் பா. செ. இலா. ஆறு(6) எல்லை கிழக்கு 3-ம் எதிரிக்குரிய ஆதனம வடக்கு இளையபிள்ளைக்கும் கனகம்மாவிற்குமுரிய வாதனம் மேற்கு ஒழுங்கையும் எஸ். கந்தையாவிற்குரிய வாதனமும் தெற்கு தம்பு திருநாவுக்கரசுவிற் குரிய வாதனம்.

1951-ம் ஆ. ஆவணி மீ 23

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

M 88—4-9-51

## காங்கேசன்துறை சனற்ரேறியத்தில் கூட்டுப் பிரார்த்தனை

இங்கு வசிக்கும் இந்து நோயாளரின் ஆத்ம சுத்தியின் பொருட்டு 26-8-51 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு சனற்ரேறியம் வெளி மைதானத்தில் ஓர் கூட்டுப்பிரார்த்தனையைச் சாது முருகதாஸ் ஆரம்பித்து வைத்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் இதனைத் தொடர்ந்து நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

— கடித

## அரசர் பிறந்ததினக் கொண்டாட்டம்

இந்த ஆண்டில் அரசர் பிறந்ததினக்கொண்டாட்டம் சென்ற யூன் மாசம் 7. உ கொண்டாடப்பட்டது; ஆனுல் அடுத்த ஆண்டில் இப்படிக் கொண்டாடாதின்றி யூன் மாசம் 5. உ வியாழக்கிழமையே கொண்டாடப்படுமென இலங்கையிலுள்ள தலைமை யுத்தியோகத்தர்களுக்கெல்லாஞ் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளன.

# ரேடியோ

### ❋ இசைத்தட்டு

**திருச்சி செவ்வாய் செப் 4**

காலை 7 10 ஆரம்பம் * 7 15 தமிழில் செய்தி 7 30 என் எஸ் சுற்பகம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 கடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வளை* 2 தமிழில்செய்தி 2 10 பண்டிட் ரவிசங்கர் விதார் * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 மதுரை பி என் சேதுராமன், பொன்னுசாமி நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 டி சோமசுந்தர தேசிகர் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 கரூர் என் சின்னஸ்வாமி ஐயர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 மதுரை பி என் சேதுராமன், பொன்னுசாமி நாகஸ்வரம் 10 முடிவு.

**திருச்சி புதன் செப் 5**

7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருப்பாற்றுருத்தி ஆர் விஸ்வநாதய்யர் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 சதம்பம் * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஜி என் பாலசுப்ரமணியம் * 2 தமிழில்செய்தி 2 10 கே சரோஜா பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 மதுரை வி என் சக்ரபாணி வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்செல்வம் * 7 45 சமது அதிதி பேச்சு 8 வெள்ளிப் பேழை நாடகம் 8 15 மதுரை வி எஸ் சக்ரபாணி வயலின் 8 30 குரல்வளை * 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருப்பற்றுருத்தி ஆர் விஸ்வநாதய்யர் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் செப் 6**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கல்யாண சோழபுரம் எஸ் துரைசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 கடுத்தரப் பள்ளிகளுக்கு 1 கிராமாதி * 1 15 பெண்ணுலகம் 1 30 கே ஆர் கணபதி புல்லாங்குழல் 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கே எல் ஸைகால் * 2 தமிழில் செய்தி 2 10 ப்ரபாத் பாண்ட் * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 கிளாரினெட் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 05 அறிவிப்புகள் 6 10 சித்தர் பாடல்கள் 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 திரைகானம் * 8 புதுமலர் 8 15 சி என் அண்ணாத்துரை-பேச்சு ராகம், தானம், பல்லவி டி கே ரங்காச்சாரி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கல்யாண சோழபுரம் எஸ் துரைசாமி பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி செப் 7**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஆர் எம் ஸ்வர்ணப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 கடுத்தரப்பள்ளிகளுக்கு 1 சதம்பம் * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஆர் பிச்சுமணி ஐயர் வீணை * 2 தமிழில் செய்தி 2 10 புல்லாங்குழல் வாத்ய கோஷ்டியுடன் * 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 வி என் முருகய்யாபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை * 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சந்திரிகையின் கதை தொடர் நாவல் 7 45 சமது தபால் பெட்டி 8 ஆர் எம் ஸ்வர்ணப்பா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 வி என் முருகையா பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு

1 காரைநகர் கிழக்கு கந்தையா ஆறுமுகமும் பெண்
2 ஷையூர் பாறுபதிப்பிள்ளையும்

வழக்காளிகள்

இல. 6081

1 காரைநகர் கிழக்கு விஞசித்தம்பி ஆறுமுகம் பெண்
2 ஷையூர் வள்ளியம்மையும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டு 6081-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1951-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 5197 இதில் ரூபா 5000 க்கு 11-11-49 தொடக்கம் 17-1-50 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கொன்றவீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் 17-1-50 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஐந்துவீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 287-28.

### காணி விபரம்

1 தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று களபூமி இறை, பன்னங்தோட்டம் விஸ்தீரணம் பரப்பு 12ம் கிணறும் எல்லை கிழக்கு சண்முகம் கைம்பெண் சேதுப்பிள்ளையும் பங்காளரும் வடக்கு சுந்தரம்பிள்ளை கந்தையாவும் கந்தையா பேரம்பலமும் மேற்கு கணபதிபெண் தனுக்கோடி தெற்கு முருகர் கந்தவனம் இதடங்கலும்,
2 தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று களபூமி இறை அறுபதாம்பிட்டி செ பரப்பு 10 குளி 4½ம் எல்லை கிழக்கு பழைய உறுதிப்படி பொன்னையா சாததிகேசு வடக்கு சுந்தரம்பிள்ளை வேலுப்பிள்ளையும் சுந்தரம்பிள்ளை சிற்றம்பலமும் மேற்கு ஆறுமுகம் நடராசாவும் பங்காளரும் தெற்கு ஆறுமுகசுவாமி கோயிலுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்
19—8—51.

M 89—4-9 51

## மல்லிவிலை குறைந்து விட்டது

பல மாசங்களாக விலையேற்றி விற்கப்பட்டு வந்த கறிக்குரிய வெஞ்சனமாகிய கொத்தமல்லியின் விலை இப்பொழுது நூற்றுக்கு ஐம்பது விகிதம் குறைந்துவிட்டதாம்.

## இலங்கைக்குப் போதிய கோதுமை மாவும் அரிசியும்

உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகிய மிஸ்ரர் M. L. D. காஸ்பிறல் இலங்கை உணவுப் பொருள் விஷயமாகப் பின்வருமாறு சொல்லுகிறாராம்:— "போதிய அளவு கோதுமை மாவும் அரிசியும் இப்பொழுது அரசினர் பண்டசாலையிலிருக்கின்றன; இவை, வருகிற டிசெம்பர் மாசமவரை இந்நாட்டு மக்களின் தேவைக்குப் போதியதாகும். இந்த செப்டெம்பர் மாசத்திலும் அடுத்த மாசத்திலும் கனடா அவுஸ்திரேலியா முதலாம நாடுகளிலிருந்து 78500 தொன் நிறை கொண்ட கோதுமைமா இலங்கையில் இறக்குமதி செய்யும்படி ஒழுங்குண்டு; இருபதினுயிரந் தொன் கொண்ட கோதுமை மா அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது."

## சிறுவனுக்குச் சுருட்டுவிற்ற வியாபாரிக்கு எச்சரிக்கை

கம்பளைக் கணித்தான கண்டிரா என்னுமிடத்தில் ஒரு கடைக்காரன் 16 வயசுக்குட்பட்ட சிறுவனுக்குப் புகையிலைசுருட்டு விற்றதாகக் கம்பளை நீதிஸ்தலத்தில வழக்குத் தொடரப்பட்டது; எதிரி தான் அபராதியென ஒத்துக்கொண்டமையினுல், நீதிபதி இப்படியான குற்றச்சாட்டு முறைப்பாடு இதற்குமுன இந்நீதஸ்தலத்தில் வந்திலதென்று சொல்லிக் குறித்த கடைக்காரனை எச்சரித்துவிட்டார்.

## சைவப் பிரசங்கம்

காரைநகர் - கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நிகழும ஆவணி மீ அ உ (24-8-51) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில திரு. ஆ. வே. அருளம்பலம் சைவசமய பரிபாலனம என்னும் விஷயத்தில பிரசங்கஞ் செய்தார். அவ்வமயம் மாணவர்கள சமய ஒழுக்க முள்ளவர்களாய் வளர்ச்சியடைவதற்கு, ஆசிரியர்கள் சைவ ஒழுக்க முள்ளவர்களாயிருத்தல் வேண்டுமென்பதையும், சைவ ஒழுக்கம் நியமப்பெற்ற மேதாவிகளால் ஸ்தாபிக்கப்பெற்ற சைவ ஆலயங்களுக்கு லௌகீகத்துறையில் காட்டமுடைய அரசாங்கம எவ்விதமாக வேனுஞ் சட்ட முண்டாக்குவதற்கு நியாயமில்லை என்பதையுங் குறிப்பிட்டார்.

— கடித


வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna, on Tuesday September 4, 1951